ஈரோடு மாநகரம் 56 வது வார்டு லட்சுமி கார்டன் தார்ச் சாலை அமைத்தல், எஸ்.எஸ்.வி.நகர் பள்ளி கட்டிடம், ஆயப்பாளி தார்ச் சாலை அமைத்தல் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, 5வது வார்டு மொக்கையன் பாளையம் பாலத்தை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்தார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், மேயர் சு.நாகரத்தினம், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், 2வது மண்டல குழு தலைவர் காட்டு சுப்பு (எ) சுப்ரமணியம், மாமன்ற உறுப்பினர்கள் செந்தில் குமார், ஜெகநாதன், கௌசல்யா சிவகுமார், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம் தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை சார்பாக உதகை தாவரவியல் பூங்காவில் நடைபெற்ற 127வது மலர்க்காட்சியின் இறுதி நிகழ்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு அங்கு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குநர் திருமதி.ஷிபிலா மேரி, நீலகிரி மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு, மாநில எஸ்.டி.எஸ்.டி. ஆணையம் பொன்தோஸ், உதகை நகர மன்றத் துணைத் தலைவர் ஜெ.ரவிக்குமார், மாவட்ட அவைத் தலைவர் போஜன் உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

தலைஞாயிறு – வேதாரண்யம் ஒன்றியங்களில்

மூன்றாம் கட்டமாக “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்!

அமைச்சர் கோவி. செழியன் தலைமையில் நடைபெற்றது! என்.கௌதமன், ப.ஆகாஷ் பங்கேற்பு!

நாகை, மே 27-

நாகை மாவட்டம் தலைஞாயிறு மற்றும் வேதாரண்யம், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மாராச்சேரி, ஆய்மூர், ஆயக்காரன்புலம் 3, ஆதனூர் ஆகிய ஊராட்சிகளில் மூன்றாம் கட்ட “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தலைமையில், நாகை மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என் கௌதமன் நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நாகை மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் பன்னத்தெரு ஊராட்சி மாராச்சேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியிலும், ஆய்மூர் ஊராட்சி மகாமழை மாரியம்மன் கோவில் திருமண மண்டபத்திலும், வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் ஆயக்காரன்புலம்3 ஊராட்சி நாடிமுத்து உதவிபெறும் தொடக்கப்பள்ளியிலும், ஆதனூர் ஊராட்சி அண்டர்காடு சமுதாயக்கூடத்திலும் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்டமுகாமில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் கலந்துகொண்டு 126 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 3 இலட்சத்து 93 ஆயிரத்து 979 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு புதுமைப்பெண் திட்டம், மகளிர் உரிமைத் தொகை, மக்களை தேடி மருத்துவம் போன்ற பல் வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் மக்களை தேடி எல்லாம் கிடைக்கும் வகையிலும், மக்களின் சிரமங்களை குறைக்கும் வகையிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தொடங்கி வைத்ததையடுத்து, பல் வேறு திட்டங்களின் பயன்களை பெறுவதற்கு ஏதுவாக தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் இம்முகாமினை நடத்துவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இம்முகாம்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர்மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, எரிசக்தித்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர் வைத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேம்லாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, சமூக சீர்த்திருத்தத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, வேளாண்மை- உழவர் நலத்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆகிய துறைகள் சார்ந்த சேவைகள் தொடர்பான கோரிக்கைகள் குறித்த மனுக்கள் இம்முகாம்களில் பெறப்பட்டு தீர்வு காணப்படும்.

இதுபோன்று, தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் கோரிக்கை மனுக்கள் அளிக்க வரும் பொதுமக்கள் தங்களது கோரிக்கையினை கணினியில் பதிவு செய்ய ஆதார் அட்டை, குடும்ப அட்டை, கைபேசி எண் மற்றும் கோரிக்கை தொடர்பான உரிய ஆவணங்களுடன் மனுக்களை அளித்து, தங்களது கோரிக்கைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு ஏதுவாக இம்முகாமினை பயன்படுத்திக்கொள்ளலாம் என உயர்கல்வித்துறை அமைச்சர்கோவி. செழியன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே .வேதரத்தினம், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் என்.வி.காமராஜ்,மாவட்ட கழக துணை செயலாளர்கள் சோ. ரவிச்சந்திரன், கற்பகம் நீலமேகம், மாவட்ட வருவாய் அலுவலர் வ.பவணந்தி, வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர் திருமால், தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம் .சு.கார்த்திகேயன், ஒன்றிய கழக செயலாளர் தலைஞாயிறு மகா.குமார், வேதாரணிய மேற்கு உதயம் வே. முருகையன், வேதாரணியம் கிழக்கு என்.சதாசிவம், வேதாரண்யம் நகரமன்ற தலைவரும் வேதாரண்யம் நகர கழக செயலாளர் மா.மீ. புகழேந்தி, பொதுக்குழு உறுப்பினர் எல்.எஸ். ஈ.பழனியப்பன், தலைஞாயிறு பேரூர்க் கழகச் செயலாளர் சி.சுப்பிரமணியன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஆதிதிராவிடர் குழு பெ.முருகானந்தம், தகவல் தொழில் நுட்ப அணி அ.பாரி பாலன், விவசாய தொழிலாளர் அணி ஆர்.துரைராஜ், சுற்றுச்சூழல் அணி க.சத்தியமூர்த்தி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செந்தாமரை செல்வன்,,தலைஞாயிறு பேரூராட்சி முன்னாள் தலைவர் ராஜேந்திரன், மற்றும் மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளில் முன்னாள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன் என நமது அடுத்த தலைமுறைக்கான திட்டங்களை செயல்படுத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் நல்லாட்சியில் திருப்பூர் மாவட்டம் உடுமலைப் பேட்டை பகுதியில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவில் மாநில மற்றும் மாவட்ட அளவில் சாதனை புரிந்த மாணவிகளுக்கு பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தங்க நாணயம் மற்றும் நினைவு பரிசு வழங்கி சால்வை அணிவித்து கௌரவித்தார். இதில் உடுமலை நகர்மன்ற தலைவர் மு.மத்தின் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இராயபுரம் சி. நவமணி
மே 27 (2012)



இராயபுரம் பகுதிக் கழக அவைத்தலைவராகவும், தமிழக அனைத்து வணிகர்கள் சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“தம்பி நவமணி என்னிடம் பாசமும், நேசமும் கொண்டவர். வணிகர்கள் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினை என்றாலும் நேரில் என்னை வந்து சந்தித்து, அதுகுறித்து விவாதிக்க அவர் தவறியதே இல்லை. வணிகர்களுக்கும், கழகத்திற்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டவர்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கோவை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட

ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம்!

வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை!

கோவை, மே 27–

தலைமைக் கழக ஒப்புதலுடன் நியமிக்கப்பட்ட கோவை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் குறித்து வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:– கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், அன்புத் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலில் இன்று (27.05.2025 செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணியளவில் கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகிய எனது தலைமையில் கோவை மேட்டுப்பாளையம் சாலை, கூடலூர் நகராட்சி, பெரிய நாயக்கன்பாளைம், கேஸ் கம்பெனி ஸ்டாப், அருகில், தாரஹா மஹால், மண்டப அரங்கில் தலைமைக் கழக ஒப்புதலுடன் நியமிக்கப்பட்ட கோவை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம் வரவேற்புரையில் கூடலூர் நகர கழக செயலாளர் அ.அறிவரசு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வே.சூரியன், எம்.மனோகர், உதிய நிதி பாபு, நாகராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. இக் கூட்டத்தில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி பா.ராஜ்குமார், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஊடகவியலாளர் சூரியா கிருஷ்ணமூர்த்தி, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அழகிரி சதாசிவம் ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர். இறுதியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பா.விக்னேஷ் நன்றியுரையாற்றுகிறார்.

அதுசமயம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

மயிலாடுதுறை வெங்கடேசன் – திருச்சி ஆரிஃப் மஃபுல் முன்னிலையில்

சவுதி அரேபியா கிழக்கு மண்டலத்தில் அடையாள அட்டை பதிவு முகாம்!

தி.மு.க. அயலக அணி – தமிழ்நாடு நலச்சங்க நிர்வாகிகள் பங்கேற்பு!

தமாம், மே 27–

சவுதி அரேபியா தமாம் கிழக்கு மாகாணத்தில், தமிழ்நாடு அரசின் அடையாள அட்டை பதிவு முகாம் மற்றும் 11 இந்தியர்கள் நாடு திரும்ப சவுதி அரேபியா தி.மு.க. அயலக அணி மற்றும் தமிழ்நாடு நலச்சங்கம் நிர்வாகிகள் மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சி ஆரிஃப் மஃபுல் மேற்கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடல் கடந்து வாழும் தமிழர்களையும் கருணை உள்ளத்தோடு பார்த்து அவர்களின் எதிர்கால நலன் கருதி தமிழர்களை அடையாளப்படுத்தும் விதமாக அடையாள அட்டையும் அவர்களுக்கான காப்பீட்டு திட்டத்தையும் உருவாக்கினார்.

தமிழ்நாடு அரசின் இந்த உயரிய திட்டத்தை சவுதி அரேபியா கிழக்கு மண்டலத்தில் இருக்கும் தமிழர்களும் பயனடையும் வகையில் கடந்த பல ஆண்டு களுக்கும் மேலாக சவுதி அரேபியாவில் வாழும் தமிழ் மக்களுக்கு அரணாக விளங்கும் தமிழ்நாடு நலச்சங்கம் மற்றும் திராவிட முன்னேற்ற கழக அயலக அணி தமிழக அரசால் உருவாக்கப்பட்ட வெளிநாடு வாழ் தமிழர் இந்தியர் நலச்சங்கம் சார்பாக இரண்டு நாட்களாக மாபெரும் அடையாள அட்டை பதிவு முகாம் நடைபெற்றது.

இரண்டு நாட்களாக நடைபெற்ற இந்த முகாமில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களின் அடையாள அட்டையை பெறுவதற்காக பதிவு செய்து அடையாள அட்டையும் பெற்றுச் சென்றனர்.

மேலும் இம் முகாமில் பல மாதங்களாக வழக்குகள் காரணமாக தாயகம் திரும்ப முடியாமல் பரிதவித்து வந்த இந்தியர்களுக்கு தமிழர் உள்பட வட இந்தியர்கள் குறிப்பாக மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, பீகார், ஆந்திரப்பிரதேசம், கேரளாவைச் சேர்ந்தவர்கள் என்று 11 இந்தியர்களுக்கு தாயகம் செல்ல இந்திய தூதரகம் மற்றும் சவுதி அரசின் உதவியுடன் சான்றிதழ் EXIT PAPER வழங்கப்பட்டது.

இந்த முகாமை கழக அயலக அணி மற்றும் தமிழ்நாடு நலச்சங்க தலைவர் மயிலாடுதுறை வெங்கடேசன் தலைமையிலும், துணைத் தலைவர் திருச்சி ஆரிஃப் மஃபுல் முன்னிலையிலும் பொதுச்செயலாளர் முகவை சீனி முஹம்மது ஏற்பாட்டிலும் நடைபெற்றது.

மேலும் இம் முகாமில் தமிழ்நாடு நலச்சங்க நிர்வாகிகளான செயலாளர் துறையூர் கமல் பாஷா, பொருளாளர் திருச்சி யூனிஸ்கான், கலை மற்றும் இலக்கிய அணி காயல்முகமது நூஹ், தொழில்நுட்ப அணி சென்னை இம்ரான், அக்பர், அபூ ரையான், முஹம்மது பாரூக், சாகுல் ஹமீது, சென்னை ஜியான், ஜான் ரிஷி சாகுல், மற்றும் பல்வேறு தமிழ் அமைப்பைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

தி.மு.க.
இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தஞ்சாவூர் தெற்கு, தஞ்சாவூர் மத்திய, கோவை வடக்கு, கோவை மாநகர் மற்றும் கோவை தெற்கு மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
27.05.2025 செவ்வாய்க்கிழமை	காலை 10.00 மணி	தஞ்சாவூர் தெற்கு	ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை.
	காலை 10.00 மணி	கோவை வடக்கு	தாரஹா மஹால், பெரியநாயக்கன்பாளையம்.
	மதியம் 12.00 மணி	கோவை மாநகர்	கிஸ்கால் கிராண்ட் ஹோட்டல், வடகோவை.
	மாலை 5.30 மணி	கோவை தெற்கு	ஸ்ரீ தங்கவேல் அய்யன் கே.வி.கே.திருமண மண்டபம், கோவில்பாளையம் சாலை, பெரிய நெகமம்.
28.05.2025 புதன்கிழமை	காலை 10.00 மணி	தஞ்சாவூர் மத்திய	அறிஞர் அண்ணா மஹால், கீழவாசல், தஞ்சாவூர்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 22-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி